DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 29/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.லட்சுமணன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.ராமையா |
| Village | : | சேத்திடல் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 21.02.2024,

---

**முதல் விசாரணை**

1. நான் சேத்திடல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். எதிரியை எனக்கு தெரியும்.

2. சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில் இல்லை மாலை 04.00 மணியளவில் நான் ஆர்.எஸ்.மங்கலம் சென்றுவிட்டு விட்டிற்கு வரும்போது எதிரி டிப்பர் லாரியை எனது மகள் வீட்டு முன்பு நிறுத்திவிட்டு மது அருந்திவிட்டு சண்டை போட்டுக்கொண்டு எனது மகளை என்னடி கண்டார ஓழி என்னடி பன்னி புடுவ என்று அசிங்கமாக திட்டிக் கொண்டிருந்தார்

3. பின்னர் நானும், எனது மகளும் நாகராஜன் என்பவரை அழைத்துக்கொண்டு ஆட்டோவில் காவல் நிலையம் செல்வதறகாக கிளம்பும்போது எதிரி கடப்பாரையை வைத்து ஆட்டோ டயரை குத்தி பஞ்சர் ஆக்கிவிட்டார்.

4. பின்னர் வண்டியில் இருந்து இறங்கிவிட்டோம் எதிரி கடப்பாரையால் என்னை குத்த வரும்போது நான் விலகி விட்டேன். மீண்டும் குத்த வரும்போது நானும் எனது மகளும் கடப்பாரையை பிடித்துவிட்டோம்.

5. அப்போது எதிரி எனது மகளின் வயிற்றில் காலால் மிதித்து தள்ளிவிட்டார். எனது மகள் என்னை கொல்ல போகிறார் கொல்ல போகிறார் ஓடி வாருங்கள் என்று கத்தினார். ஊர் பொதுமக்கள் வந்து சண்டையை விலக்கி விட்டார்கள் டிராக்டரை மடக்கி நிப்பாட்டி விட்டார்கள். எனது மகள் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டார்.

6. பிறகு எங்கள் ஊருக்கு இரண்டு போலிசார் வந்தார்கள். போலிசார் வந்தவுடன் எதிரி தப்பி ஓடிவிட்டார். போலிசார் விரட்டி சென்றார்கள். பின்னர் சம்பவம் நடந்தவுடன் நாங்கள் ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு பின்னர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு போலிசார் வந்தார்கள். இது சம்பந்தமாக என்னை போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் புகாரிலும் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் எனது மகள் மயக்கம் ஆகிவிட்டார் என்பதால் அவருக்கு எதுவும் தெரியாது என்றால் அதுக்குப்பிறகு காவல் நிலையம் சென்றுவிட்டோம்.

2. புகார்மனுவை மனு எழுதுபவரிடம் எனது மகள் கொடுத்து புகார்மனு எழுதி புகார்மனுவை காவல் நிலையத்தில் கொடுத்தார். எங்களுக்கும் எதிரி குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். எதிரிக்கு பெண் பார்த்தபோது பெண் வீட்டாரிடம் சென்று அவருக்கு பெண் கொடுக்காதிர்கள் என்று நாங்கள் சொன்னோம் என்றால் சரியல்ல.

3. எனக்கு கண்பார்வை சரியாக தெரியாது என்றால் ஒரு கண்பார்வை முழுமையாக தெரியாது. ஒரு கண் தெரியும். ஆட்டோக்காரர் எதிரி மீது ஆட்டோ டயர் பஞ்சர் செய்தது சம்பந்தமாக ஏதும்புகார் அளித்தாரா என்றால் ஆட்டோர்க்கரர் வெளியூர்காரர் அவர் ஏதும் புகார் அளிக்கவில்லை.

4. நான் சொன்னதுபோல, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் ஏற்கனவே எங்களுக்கும் எதிரிக்கும் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எதிரி மீது அ.சா.1 பொய் புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

5. அ.சா.1 எனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 29/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.நாகராஜ் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.சேவுகன் |
| Village | : | சேத்திடல் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 21.02.2024,

---

**முதல் விசாரணை**

1. நான் சேத்திடல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். எதிரியை எனக்கு

தெரியும்.

2. தேதி, மாதம் வருடம் நினைவில் இல்லை. அ.சா.1 ஐ ஆட்டோவில் அழைத்துச் சென்றேன். கூட்டாம்புளி அருகே சென்றபோது ஆட்டோவை நிறுத்த சொன்னார்கள் நான் நிறுத்தினேன். அதன்பிறகு அவர் இறங்கிவிட்டார். நான் ஊருக்கு சென்றுவிட்டேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆட்டோவை யார் நிறுத்த சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 29/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-4 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

-----------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தர்மராஜ் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.கருப்பயைா |
| Village | : | சேத்திடல் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 21.02.2024,

---

<u>முதல் விசாரணை</u>

1. நான் சேத்திடல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மருமகள் ஆவார். எதிரியை எனக்கு தெரியும்.

2. 2020ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை மாலை 04.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டின் முன்பு எதிரி டிப்பர் லாரியை வைத்துக்கொண்டு அ.சா.1ன் வீட்டில் ஏற்ற சென்றார். எனது வீடு அ.சா.1ன் வீட்டின் 100 மீட்டர் பக்கத்தில் உள்ளது.

3. பின்னர் அ.சா.1 எனக்கு போன் செய்து மேற்படி சண்டையை பற்றி சொல்லி எதிரி மது அருந்திவிட்டு வந்து சண்டை செய்வது பற்றி சொல்லி என்னை வரச்சொன்னார். பின்னர் நான் சம்பவ இடத்திற்கு சென்று அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை ஆட் டோவில் ஏற்றி காவல் நிலையம் அனுப்பி வைத்தேன். கூட்டாம்புலி அருகே எதிரி அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை மறித்து அ.சா.1ஐ கடப்பாறையல் அடித்துவிட்டார்.

4. அப்போது அந்த வழியாக வந்தவர்கள் தகாவல் சொன்னார்கள். நான் சென்று அ.சா.1ஐ இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. சம்பவம் நடக்கும்போது நான் எனது வீட்டில் படுத்து இருந்தேன் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் யார் புகார் அளித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.